**நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி - சமூக வலைத்தள நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கியின் சமூக வலைத்தள நியதிகளையும் நிபந்தனைகளையும் தயவுசெய்து கவனமாக வாசிக்கவும். சட்டரீதியான, மதிப்பளிக்கத்தக்க மற்றும் ஒழுக்கநெறிசார்ந்த விதத்தில் வங்கியின் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதற்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் (''விதிகள்'') இவ்வாவணம் எடுத்துரைக்கின்றது. ஏதேனும் பொருளை (எழுதப்பட்ட தகவல்கள், புகைப்படங்கள், காணொளிகள், முகபாவ படவுருகடகள் (இமோஜிகள்) என்பவற்றை உள்ளடக்குகின்ற பொருட்கள் ஆனால் அவற்றுக்கு மட்டுப்படாது) எமது சமூக ஊடக வலைத்தளங்களுக்கு பயன்படுத்துதல் அல்லது சமர்ப்பித்தல் மூலம் இவ்விதிகளை நீங்கள் வாசித்துள்ளீர்கள், புரிந்துகொண்டுள்ளீர்கள், ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் ஏற்றுநடப்பதற்கு இணங்கியுள்ளீர்கள் என உடன்படுகின்றீர்கள்.

இலங்கையிலுள்ள நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி (சிலசமயங்களில் ''வங்கி'' என் குறிப்பீடு செய்யப்படும்) ஆகிய நாம் வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுவதற்கு, உதவுவதற்கு அத்துடன் ஈடுபடுவதற்கு சில சமூக ஊடக தளங்கள் மீது அலைவரிசைகளை, பக்கங்களை, மற்றும் கணக்குகளை தொழிற்படுத்துகின்றோம். வேறு வகையில் குறிப்பிட்டாலன்றி இவை இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களை நோக்காக கொண்டவை என்பதுடன் இலங்கையில் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

எமது சேவைகளை நாம் மேம்படுத்தக் கூடிய விதத்தில் வங்கி பற்றி இவ் அலைவரிசைகள் மீது மேற்கொள்ளப்படுகின்ற கருத்துக்களை, பதிவிடல்களை நாம் கண்காணித்து பதிவுசெய்கின்றோம்.

உங்களால் அல்லது எமது சமூக ஊடக வலைத்தளங்களின் எவரேனும் பயனரால் பதிவிடப்படும் ஏதேனும் பொருளின்/தகவலின் உள்ளடக்கத்திற்கு அல்லது செம்மைக்கு வங்கி உங்களுக்கு அல்லது எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு பொறுப்புடையதாகாது அல்லது கடப்பாடுடையதாகாது.

எமது சமூக ஊடக வலைத்தளங்கள் மீது எவரேனும் தனிப்பட்டவரால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அவரின் கருத்துக்களேயன்றி வங்கியின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

வங்கியினால் பயன்படுத்தப்படும் சமூக ஊடக தளங்களின் (எடுத்துக்காட்டாக டிவிற்றர் லிங்டின், பேஸ்புக், யூடியூப் மற்றும் இன்ஸ்டகிராம்) பயன்பாட்டு நியதிகளும் கொள்கைகளும் அத்தகைய சமூக ஊடக தளங்கள் மீதான எமது அலைவரிசைகளின் மற்றும் பக்கங்களின் உங்களது பயன்பாட்டிற்கு எற்புடையதாகும் என்பதுடன் அப்பயன்பாட்டு நியதிகளையும் கொள்கைகளையும் அதேபோன்று இவ்விதிகளையும் நீங்கள் பின்பற்றுகின்றீர்கள் என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும். அச்சமூக ஊடக தளங்களின் உங்களது பயன்பாட்டுடன் இணையப்பெற்ற, அல்லது அவற்றின் நியதிகள், நிபந்தனைகள் அத்துடன் கொள்கைகள் என்பவற்றை பார்ப்பதற்கு அல்லது இணங்கியொழுகுவதற்கு உங்களது தவறுகை என்பவற்றுடனான ஏதேனும் பொறுப்பினை ஏற்பதற்கான உரிமை மறுதளிக்கின்றோம்.

இத்தளம் மீதான உள்ளடக்கமும் பொருளும் தகவல் நோக்கங்களுக்காக மாத்திரமே என்பதுடன் வங்கியின் பங்குத்தொகுதியை, பிணையங்களை அல்லது ஏதேனும் நிதியியல் சாதனத்தை, உற்பத்தியை அல்லது சேவையினை கொள்வனவுசெய்வதற்கு விருப்பறிவிப்பொன்றாக அல்லது கோருகின்றவொன்றாக எண்ணப்படவில்லை. வங்கி அதன் சமூக ஊடக தளங்கள் வாயிலாக முதலீடு, வரி அல்லது வேறு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குவதில்லை. இத்தளம் மீதான உங்களுக்கும் வங்கிக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடல் வாடிக்கையாளர் ஒருவர் என்ற வகையில் எங்களுடன் நீங்கள் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உடன்படிக்கைகளை மாற்றாது, திருத்தாது அல்லது மேலுறுத்தாது.

எமது சமூக ஊடக தளங்களை பயன்படுத்துகையில் நீங்கள்:

- சூழ்நிலைக்கு வெளியில் மேற்கோள்காட்ட மாட்டீர்கள் என்றும் பொருட்களின் மூலம் என்ற வகையில் மூல ஆசிரியருக்கான பாராட்டினை உள்ளடக்குவீர்கள் என்றும்;
- எமது சமூக ஊடக தளங்கள் மீது நீங்கள் பகிர்கின்ற உள்ளடக்கங்களை ஆளுகின்ற அனைத்து ஏற்புடைய உள்நாட்டு, வெளிநாட்டு, சர்வதேச சட்டங்களுடன் இணங்கியொழுகுவீர்கள என்றும்;
- அவதூறான, சட்டத்திற்குபுறம்பான, தீய, குற்றமான, வெறுப்பான, துஷ்ப்பிரயோகமான, ஆபாச, வெறுப்பை துாண்டுகின்ற, அச்சுறுத்துகின்ற, ஒருவரின் அந்தரங்கத்தை சாடுகின்ற அல்லது வேறு வகையில் நிராகரிக்கத்தக்கதாகவிதத்தில் இருக்கமாட்டீர்கள் என்றும்;
- சாதி, பாலினம், மதம், தேசியம், மாற்றுத்திறன், சமயம் அல்லது நம்பிக்கை, பாலின பாலியல் நாட்டம், மாற்றுப்பாலின ஆளொருவராக இருத்தல், அல்லது வயது என்ற காரணங்களின் அடிப்படையில் பாகுபாட்டினை ஊக்கவிப்பதில்லை என்றும்;
- பதிப்புரிமை, வடிவமைப்புரிமையை, தரவுத்தளவுரிமையை, காப்புரிமைகளை, வர்த்தக சின்னங்களை, ஒழுக்கநெறி அல்லது செயலாக்குநர் உரிமையை அல்லது எவரேனும் வேறு மூன்றாந்தரப்பு உரிமையை ஊறுபடுத்துவதில்லை என்றும்;
- எவரேனும் வேறு ஆளுக்கு தொந்தரவுசெய்வதில்லை, நிலைகுலையச்செய்வதில்லை, அச்சுறுத்துவதில்லை அல்லது அழுத்தத்தை எற்படுத்துவதில்லையென்றும்;
- தனிப்பட்டவர்களுக்கு அல்லது கணினிகளுக்கு அல்லது முறைமைகளுக்கு அபாயத்தை அல்லது காயத்தை விளைவிக்கின்ற அறிவுறுத்தலொன்றை/ ஆலோசனையொன்றை உள்ளடக்குகின்ற உள்ளடக்கத்தை/பொருளை பதிவிடுவதில்லையென்றும்;
- ஏதேனும் சட்டத்திற்கு புறம்பான அல்லது குற்றவியல் செயலை புரிவதற்கு அல்லது சட்டத்திற்கு புறம்பான அல்லது குற்றவியல் செயலை மன்னிப்பதற்கு எவரையும் ஊக்குவிப்பதில்லையென்றும்;
- விடயம் அது அல்லாதிருப்பின், உங்களது உள்ளடக்கம்/பொருள் வங்கியிலிருந்து (அல்லது ஏதேனும் குழுமக் கம்பனிகளில் எதாவது) தோன்றுகின்றது என்ற எண்ணத்தை வழங்கமாட்டீர்கள் என்றும் அல்லது எவரேனும் ஆளை ஆள்மாறாட்டம் செய்வதற்கு அல்லது எவரேனும் ஆளுடன் உங்களது அடையாளத்தை அல்லது இணைப்பை தவறாக பிரதிநிதிப்படுத்துவதற்கு இடமளிப்பதில்லையென்றும்; அத்துடன்
- ஏதேனும் விளம்பரப்படுத்துகின்ற உள்ளடக்கத்தை/ பொருளை பதிவிடுவதில்லையென்றும்

இணங்குகின்றீர்கள்

எமது சமூக ஊடக தளங்களை தொடர்கின்ற பயனாளர்களை சில சந்தர்ப்பங்களில் நாம் தன்னியக்கமாக பின்தொடரலாம். பின்தொடர்வதானது ஏற்பிசைவினை உருவாக்காது; நாம் சொந்தமாக கொள்ளாத கணக்குகள் மீது பதிவிடப்பட்ட செய்திகளை/ உள்ளடக்கத்தை மீளப்பதிவிடுதல் அல்லது பகிர்தல், அல்லது வேறுபட்ட தளமொன்றில் வேறுவகையில் தகவல்களை பகிர்தல் அல்லது டிவிற்றர், லிங்டின், முகநூல், அல்லது இன்ஸ்டகிராம் உள்ளடங்கலாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படாது ஏதேனும் சமூக ஊடக தளங்களை பின்தொடர்தல் என்பவற்றுக்கும் இது ஏற்புடையதாகும்.

சமூக ஊடக தளங்களையோ அல்லது அவற்றின் உற்பத்திகளுக்கு அல்லது சேவைகளுக்கு அல்லது மூன்றாம் தரப்பினர் அல்லது வேறு பயனாளர்கள் மூலம் அவை மீது பதிவிடப்படுகின்ற ஏதேனும் தகவல்களுக்கு நாம் உத்தரவாதமளிப்பதில்லை.

சமூக ஊடகங்கள் ஊடாக வங்கியினுடன் நீங்கள் ஈடுபடுகின்ற போது, உங்களது தனிப்பட்ட தரவுகள் அத்தகைய சமூக ஊடக தளங்களின் சேமிப்பகங்களில் சேமிக்கப்படலாம், இவை வங்கியின் கட்டுப்பாட்டுக்கு வெளியிலானவையாகும். உங்களது தனிப்பட்ட தகவல்களை நாம்

எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து எமது அந்தரங்க கொள்கையைப் பார்க்கவும்.

எமது சமூக ஊடக தளங்கள் மீது உங்களால் பதிவிடப்பட்ட எவையேனும் தகவல்கள் பொதுமக்களால் அணுகப்பட்டு வாசிக்கப்படலாம். ஆதலால், இது தனிப்பட்ட கணக்கு தகவல்களை அல்லது நிதியியல் ஒழுங்கேற்பாடுகளை கலந்துரையாடுவதற்கான பொருத்தமான மன்றமல்ல.

சமூக ஊடக வலைத்தளங்கள் ஊடாக தனிப்பட்ட, கணக்கு அல்லது பாதுகாப்புத் தகவல்களை பகிருமாறு வங்கி உங்களை கோராது. இவ் அலைவரிசைகள் மீது அத்தகைய தகவல்களை நீங்கள் பதிவிடக்கூடாது.

எமது சமூக ஊடக தளங்களுக்கு நாம் பதிவிடுகின்ற உள்ளடக்கம் மீது நீங்கள் பகிரலாம் அத்துடன் கருத்துக் கூறலாம், ஆயின் அதனை நீங்கள் மாற்றியமைக்கக் கூடாது அத்துடன் அவ்வுள்ளடக்கத்தின் மூலமாக எம்மை எடுத்துக் காட்டலாகாது. எமது சமூக ஊடக தளங்கள் மீது நாம் பதிவிடுகின்ற அனைத்து மூல உள்ளடக்கமும் வங்கியின் பதிப்புரிமையாவதுடன் ஏதேனும் வங்கி வியாபார குறிகள், சின்னங்கள் அல்லது வடிவமைப்புக்கள் வங்கியின் புலமைச்சொத்து ஆதனமாகும்.

எமது சமூக ஊடக தளங்களில் உங்களால் பதிவிடப்பட்ட அல்லது தரவேற்றம் செய்யப்பட்ட எதேனும் பொருள் அவர்களுக்கு அவதூறை எற்படுத்துகின்றது, அவர்களது புலமைச்சொத்து உரிமைகளை, அல்லது அவர்களது உரிமைகளை மீறுகின்றது எனக் கோருகின்ற எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு உங்களது அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கும் நாம் உரிமையினை கொண்டுள்ளோம்.

வங்கியோ அன்றில் எமது சமூக ஊடகத் தளங்களுக்காக தகவல்களை உருவாக்குவதில், உற்பத்திசெய்வதில் அல்லது விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ள எவரேனும் வேறு தரப்பினரோ அன்றில் மேற்குறித்தவற்றின் அலுவலர்களோ, பணிப்பாளர்களோ, ஊழியர்களோ அல்லது பிரதிநிதிகளோ எமது சமூக ஊடக தளங்களை அல்லது இணையப்பற்ற தளமொன்றை பயன்படுத்தல், எமது சமூக ஊடக தளங்களின் ஏதேனும் இடைநிறுத்தல், திருத்தியமைத்தல் அல்லது இரத்துச்செய்தல், அல்லது தொழில்நுட்ப பிரச்சினைகள், கிடைக்கப்பெற்ற அல்லது பதிவிடப்பட்ட சமர்ப்பணங்கள் என்பவற்றிலிருந்த தோன்றுகின்ற அல்லது இணையப்பெற்ற இலாபங்கள் இழத்தல், பிரதியிட்டு சேவையினை பெற்றுக்கொள்வதில் செலவு அல்லது வாய்ப்பிழத்தல் உள்ளடங்கலாக அவற்றுக்கு மட்டுப்பாடின்றி அத்தகைய சேதங்களின் சாத்தியப்பாடு பற்றி வங்கி அறிந்துள்ளதாயினும் சரி அறியாமல் இருப்பதாயினும் சரி தனிப்பட்ட காயம், மரணம், அல்லது எமது சமூக ஊடகத் தளங்களை அல்லது இணைந்த தளத்தை ஏதேனும் ஒன்றின் பயன்படுத்துவதற்கான தாமதம் அல்லது இயலாமை உள்ளடங்கலாக ஏதேனும் நேரடி, நேரடியற்ற, விசேட, தணடிக்கின்ற, விளைவான்தன்மைமிக்க அல்லது நேரடியற்ற சேதங்களுக்கு அல்லது இழப்புகளுக்கு எவ்விதத்திலேனும் பொறுப்பாகாது. இவ்வரையறையானது பயனாளரின் உபகரணத்தை பாதிக்ககூடிய ஏதேனும் வைரஸ், தரவு அல்லது அபாயமிக்க குறியீடு கடத்தலை, எமது சமூக ஊடக வலைத்தளங்களின் கோவைகள், பயனாளரின் தேடுவான் அல்லது செய்நிரலாக்கத்தை அணுகுகின்ற எதேனும் தளம் என்பவற்றுக்கிடையிலான ஒவ்வாத்தன்மையை, அல்லது ஏதேனும் இலத்திரனியல் அல்லது தொலைபேசி உபகரணத்தின், தொடர்பாடல் அல்லது தொடர்பு இணைப்பின் செயலிழப்பு, அதிகாரமளிக்கப்படாத பெறுவழி, திருட்டு, தொழிற்படுத்துநர் தவறு, அல்லது கட்டுப்பட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் எனபவற்றை உள்ளடக்குகின்றது. ஆயினும் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

எமது சமூக ஊடக வலைத்தளங்களுக்கான தொடர்ச்சியான, தடங்கலற்ற அல்லது பாதுகாப்பான பெறுவழிக்கு நாம் உத்தரவாதமளிப்பதில்லை.

இணைக்கப்பட்ட தளங்களின் மூலம் வழங்கப்படும் உள்ளடக்கம், செம்மை, வெளிபடுத்தப்பட்ட அபிப்பிராயங்கள் மற்றும் வேறு இணைப்புகள் வங்கி மூலம் ஆராயப்பட, உறுதிப்படுத்தப்பட கண்காணிக்கப்பட அல்லது ஏற்பிசைவளிக்கப்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை.

எமது சமூக ஊடக தளங்கள் மீது அல்லது இணைக்கப்பட்ட தளம் ஒன்றின் மீது வெளியிடப்பட்ட தகவல்கள், மென்பொருள், உற்பத்திகளின் மற்றும் சேவைகளின் விபரங்கள் செம்மையின்மைகளை அல்லது தட்டச்சு பிழைகளை உள்ளடக்கலாம் என்பதுடன் அத்தகைய செம்மையின்மைகளுக்குக்கான அல்லது தட்டச்சுப்பிழைகளுக்கான ஏதேனும் பொறுப்பை நாம் குறிப்பாக ஏற்கமறுக்கின்றோம். எமது சமூக ஊடக தளங்களின் அத்துடன் இணைக்கபெற்ற தளங்களின் மீதான தகவல்களுக்கான மாற்றங்கள் காலமுறையாக மேற்கொள்ளப்படுகின்றன. வங்கியானது எமது சமூக ஊடக தளங்களுக்கு எந்நேரத்திலும் மேம்படுத்தல்களை அல்லது மாற்றங்களை மேற்கொள்ளலாம்.

எமது சமூக ஊடக வளைத்தளங்கள் 18 வருடங்களுக்கும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தனிப்பட்டவர்களால் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. ஆகையினால் பராயமடையாதோர் எமது சமூக ஊடக வளைத்தளங்களை பயன்படுத்தவதற்கு முன்னர் அவர்களது பெற்றோரிடமிருந்து அல்லது பாதுகாவலரிடமிருந்து அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும். எமது சமூக ஊடக வலைத்தளங்களை பயன்படுத்தவதற்கு அவர்களது பிள்ளைகளை அனுமதிக்கின்ற பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள், முதலில் அவர்களது பிள்ளைகளுடன் இணைய வழி பாதுகாப்பு பற்றி கலந்துரையாடுவதுடன் சமூக ஊடக வலைத்தளங்களில் ஏதேனும் பயன்பாட்டினை கண்காணிப்பதற்கு முயற்சிப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம். சமூக ஊடகங்களை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்தலாம் என்பது பற்றியும் இவ்விதிகளுடன் இணங்குகின்ற விதம் பற்றியும் பராயமடையாதவர்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும்.

எமது சமூக ஊடக வலைத்தளங்களுக்கு ஏதேனும் பொருட்களை சமர்ப்பிப்பதன் வாயிலாக அத்தகைய பொருட்களை பயன்படுத்துவதற்கும் ஒழுக்கநெறிசார்ந்த உரிமைகளை தள்ளுபடிசெய்வதற்கும் பிரத்தியேகமற்ற இடையறா உரிமம் ஒன்றினை எமக்கு வழங்குவதற்கு நீங்கள் இணங்குகின்றீர்கள். நாம், பொருளை ஏதேனும் வடிவத்தில் அத்துடன் ஊடகத்தில் தங்குதடையின்றி, பயன்படுத்துவதற்கு, தொகுப்பதற்கு, மாற்றுவதற்கு, மீள்உருவாக்கத்திற்கு, வெளியிடுவதற்கு அத்துடன்/ அல்லது பகிர்வதற்கு உரிமையினை கொண்டிருப்போம். இவ் உரிமமானது கட்டணம் அற்றதும் நிரந்தரமானதும் துணை உரிமத்திற்கு இயலளவு உடையதுமாகவும் இருக்கும்.

நீங்கள் பதிவிடுகின்ற பொருள் எவரேனும் வேறு ஆளின் பதிப்புரிமையினை தரவுத்தள உரிமையினை அல்லது வர்த்தக குறியீட்டினை வரப்புமீறவில்லையென்பதனை நீங்கள் உறுதி செய்யவேண்டும். உங்களது பொருளை எமக்கு சமர்ப்பிப்பதன் வாயிலாக மேலே விபரிக்கப்பட்ட பிரத்தியேகமற்ற பதிப்புரிமை உரிமத்தை எமக்கு வழங்குவதற்கு உங்களிடம் நீங்கள் உரிமையைக் கொண்டுள்ளீர்கள் என நீங்கள் உத்தரவாதமளிக்கின்றீர்கள்.

அத்தகைய உரிமம் ஒன்றினை எமக்கு வழங்க முடியாத நிலையில் நீங்கள் இருப்பீர்களாயின், தயவுசெய்து எமது சமூக ஊடக வலைத்தளங்களுக்கு ஏதேனும் பொருட்களை சமர்ப்பிக்க வேண்டாம்.

எமது அபிப்பராயத்தின்படி இவ்விதிகளை மீறி எமது சமூக ஊடக தளங்களை எவரேனும் தனிப்பட்டவர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாயின், முன்கூட்டியே எச்சரிக்கையின்றி அகற்றுவதற்கு அல்லது ஏதேனும் பங்களிப்புக்கான பெறுவழியினை செயலிழக்கச் செய்வதற்கு அத்துடன் எமது சமூக ஊடக தளங்களுக்கான அவர்களது நுழைவின் நிபந்தனைகளை முடிவுறுத்துவதற்கு, இடைநிறுத்துவதற்கு, அல்லது மாற்றுவதற்கு எமக்கு உரிமை உள்ளது. இவ்விதிகளின் மீறுகைக்காக எவரேனும் தனிப்பட்டவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அல்லது நியாயமானதென பொருத்தமானதாக கருதப்படுகின்றவாறு அத்தகைய வேறு நடவடிக்கை எடுப்பதற்கும் நாம் உரிமையை கொண்டுள்ளோம்.

இவ்விதிகளை நாம் எந்நேரத்திலும் மாற்றலாம். மாற்றம் மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து அவை உங்கள் மீது சட்டரீதியாக பிணிப்பதாகவும் உங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்பதாலும் நாம் மேற்கொள்கின்ற ஏதேனும் மாற்றங்கள் பற்றி கவனத்தில் எடுப்பதற்கு காலத்துக்கு காலம் இப்பக்கத்தை பரிசோதிப்பதற்கு நீங்கள் எதிர்பார்க்கப்படுகின்றீர்கள். மாற்றம் மேற்கொள்ளப்பட்ட

பின்னர் எமது சமூக ஊடக வலைத்தளங்களின் எதனையும் ஏற்றுக் கொள்வதற்கும் இனங்கிணயொழுகுவதற்கும் நீங்கள் இணங்குகின்றீர்கள்.

மேலும் தேடலின் அல்லது எமது சமூக ஊடக வலைத்தளங்களை வேறு வகையில் பயன்படுத்துவதில் இருந்து விடயங்களை நுழைவதன், பார்ப்பதன், அணுகுவதன், தரவிறக்கம் செய்வதன் மூலம் இவ்விதிகளின் ஏதேனும் மீறுகை அல்லது உங்களது சமர்ப்பணங்களிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் அல்லது அனைத்து உரிமை கோரிக்கைகள், இழப்புகள், செலவுகள், சேதங்கள், பொறுப்புகள் அத்துடன் கிரயங்கள் மற்றும் செலவினங்கள் (நியாயமான அற்றோனிக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளடங்கலாக) எதிராக வங்கிக்கு அதன் முகவர்களுக்கு, சேவை வழங்குனர்களுக்கு அத்துடன் அவற்றின் தொடர்புடைய தாய் கம்பனிகளுக்கு அத்துடன் அதன் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்களுக்கு, இணைநிறுவனங்களுக்கு, பின்னுரித்தாளர்களுக்கு, உரிமதாரர்களுக்கு, சாட்டுதல்காரர்களுக்கு அத்துடன் அதன் ஒவ்வொரு பணிப்பாளர்களுக்கும், அலுவலர்களின் முகவர்களின், பங்குரிமைமூலதன உடமையாளர்களின் மற்றும் ஊழியர்களின் நட்டோத்தராவதமளிப்பதற்கும், காப்பதற்கும் ஆபத்தின்றி பேணுவதற்கும் இணங்குகின்றீர்கள்.

இவ்விதிகள் இலங்கையின் சட்டங்களுக்கு இணங்க நிர்வகிக்கப்படுகின்றன என்பதோடு அவற்றிற்கு ஏற்ப போருள்கோடல˙ செய்யப்படும் என்பதோடு இச்சட்டவிதிகளிலிருந்து அல்லது இச்சட்டவிதிகள் தொடர்பில், அதன் விடயப் பொருள் அல்லது அதன் உருவாக்கம் தொடர்பில் எழுகின்ற ஏதேனும் பிணக்கை அல்லது உரிமைக்கோரிக்கையை தீர்ப்பதற்கு இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு நீங்கள் மாற்றமுடியாமல் உட்படுத்தப்படுகின்றீர்கள். இந்த விதிகளின் எதேனும் பகுதி சட்டத்திற்கு முரணாக, வறிதானதாக கருதப்பட்டால் அல்லது ஏதேனும் காரணத்திற்காக செயற்படுத்த முடியாததாக இருந்தால், அத்தகைய பாகம் நீக்கப்படக் கூடியதாகக் கருதப்படும் என்பதோடு அத்தகைய செயற்பாடு எஞ்சிய பாகங்களின் செல்லுபடியான தன்மை மற்றும் செயற்படுத்தப்படக் கூடிய தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

**சந்தைப்படுத்தல் தொடர்பூட்டல்களில் பங்கேற்காமை**

ஏதேனும் நேரத்தில் நீங்கள் சமூக ஊடகம் மீது உங்களுக்கான அஞ்சல் அனுப்பல்களை விளம்பரங்களை உங்களுக்கு அனுப்புவதை நிறுத்துவதற்கு விரும்புவீர்களாயின், எமது தொடர்பு நிலையத்தில் 0114711411 என்ற இலக்கத்தினுடாக அழைப்பை ஏற்படுத்தி எமது பிரதிநிதிகளுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். பின்னர், நாம் உங்களுக்கு செலவுகளின்றி 30 நாட்களுக்குள் உங்கள் கோரிக்கையினை செயற்படுத்துவோம் அல்லது எங்களால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியில் செயற்படுத்துவோம் என்பதுடன் நேரடி அஞ்சல் அனுப்புவதன் ஊடாக அத்துடன் சமூக ஊடக விளம்பரப்படுத்தல் பிரச்சாரங்கள் ஊடாக எதிர்கால நேரடி சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புகளில் நீங்கள் உள்ளடக்கப்படாதிருப்பதற்கும் உறுதியளிக்கின்றோம்.

**சமூக ஊடக முறைப்பாடு கையாளுகின்ற நடைமுறை**

தீர்மான கால வரையறைகள்

அனைத்து விசாரணைகளுக்கும் உடனடியாக பதில் வழங்குவதற்கும் எமது உத்தியோகபூர்வ சமூக ஊடக வலைத்தளங்களில் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கும் பதில் வழங்குவதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இக்கடமைப் பொறுப்பின் பாகமாக நாம் ஒன்றில் உங்களது கோரிக்கைகளுக்கு/ பிரச்சினைகளுக்கு அவை கிடைக்கப்பெற்ற நியாயமான காலப்பதியினுள் கிடைக்கப்பெற்றமையை அறிவிப்போம் அல்லது பதில் வழங்குவோம். ஏதேனும் பிணக்கு நிகழும் சந்தர்ப்பத்தில், வங்கியின் நியம செயன்முறைப்படுத்தல் காலத்தை கடைப்பிடித்து தீர்மானச் செயன்முறை அமைந்திருக்கும்.